DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

**IN THE COURT OF VI ADDITIONAL SESSIONS JUDGE**
Case No. **S.C.No. 387 of 2019** dated: 20.02.2023

**Deposition of witness for / P.W.1**

Name : ஜெகன்

Father's name : கணேசன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of February 2023.

(மனுவின்பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு எதிரிதரப்பு குறுக்கு விசாரணை)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** -

எனது வீடு இருக்கும் இடம் மேற்கு மாம்பலம் பகுதியைச் சேர்ந்தது. எனக்கு பெயிண்டிங் வேலை தான். நான் பெயிண்ட் கான்டிராக்ட் எடுத்தும் செய்வேன். கூலிக்கு அழைத்தாலும் போய் வேலை பார்ப்பேன். ஆர்-6 குமரன் நகர் காவல்நிலையத்திற்கு நான் பெயிண்டிங் வேலை செய்திருக்கிறேன் என்றால், போலீஸ்துறையில் யார் அழைத்து பெயிண்டிங் வேலை கொடுத்தாலும் செய்வேன். எனக்கு ஆர்-6 குமரன்நகர் காவல்நிலையத்தில் போலீசாரை தெரியும் என்றால் தெரியாது. 11.10.2018ம் தேதியில் எனக்கு கோடம்பாக்கம் ரோட்டின் கடைசிப் பகுதியில் வேலை நடந்தது. நான் வேலை செய்யும் இடத்திற்கு அன்னபூரணி பள்ளி வளாகம்

வழியாக செல்லலாம் என்றால் அவ்வாறு செல்ல முடியாது. போலீசார் என்னை புகார் கொடுக்க சொல்லவில்லை. புகாரை நான் காலை 7.00, 7.30 மணிக்குள் கொடுத்தேன். போலீசார் என்னை போன் பண்ணி வர சொன்னார்கள், நான் காவல்நிலையம் போனேன். நான் போலீசிடம் கொடுத்த புகாரில் கையொப்பம் தான் செய்தேன். உடல்நிலை சரியில்லாமல் படுத்துக்கிடந்தவருக்கு சிகிச்சை கொடுக்க வேண்டும் என்பதற்காக நான் தான் என் மொபைலில் இருந்து 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து சொன்னேன். சிகிச்சையளிக்கப்பட்ட நபர் எழுந்துபோனதாக நான் சொல்லவில்லை. இறந்து கிடந்ததை யாரும் எனக்கு சொல்லவில்லை, நானே நேரடியாக பார்த்தேன். காலை 6.00 மணியளவில் அவ்வாறு இறந்து கிடந்ததை பார்த்தேன். மதன்ராஜ் என்ற பெயர் கொண்ட நபரை நான் சம்பவத்திற்கு முன்பாக நான் பார்க்கவில்லை. ஆஜர் எதிரியின் பெயர் மதன்ராஜ் என்று சிசிடிவி பதிவுகளை பார்த்தபிறகு போலீசார் சொல்லி தெரியும். இறந்துகிடந்த நபருக்கு முகம், கை, காலில் காயம் இருந்ததை பார்த்தேன். முதுகில் காயம் இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. நான் எதையும் பார்க்கவில்லை என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு. 11.10.2018ம் தேதி இரவு 70 வயது மதிக்கத்தக்க நபர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றும், மறுநாள் 12.10.2018ம் தேதி அதே முதியவர் காயம் பட்டு இறந்து கிடந்தார் என்பதை நான் பார்த்ததாக சொல்வதும், பொய்யாக சொல்கிறேன் என்றால் அது தவறு. நான் போலீசிடம் அளித்த புகார், வாக்குமூலம், மறுவாக்குமூலம் ஆகியவற்றில் இறந்துகிடந்த நபருக்கு இடது கண் ஓரம், இடது கை, இடது கால் ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயம் இருந்தது என்றும், ஆனால் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் அந்த நபருக்கு வலதுபக்க நெற்றி, தலை, இடது

கை, ஆகிய இடங்களில் காயம் என்று முரண்பாடாக சொல்லியுள்ளேன் என்றும், எனவே நான் சம்பவம் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் அது தவறு. நான் எதையும் பார்க்கவில்லை என்றும், காவல்நிலையத்தில் கான்டிராக்ட் எடுத்து பெயிண்டிங் வேலை பார்த்ததால் அந்த பழக்கத்தின் காரணமாக போலீசார் தயாரித்த புகாரில் கையொப்பம் செய்து, போலீசார் சொல்லிக்கொடுத்தபடி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Dt. 20.02.2023 VI Additional Sessions Judge